# தமிழக விவசாயிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

## ஔவையார் - பாரதியார் பாடல்களை நினைவுகூர்ந்த பிரதமர்

**சென்னை, பிப். 14:** வேளாண்மை மற்றும் சுயசார்பினை வலியுறுத்தும் வகையிலான ஔவையார், பாரதியார் பாடல்களை தமிழிலேயே பாடி பிரதமர் நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார். கல்லணைக் கால்வாய் புனரமைப்புப் பணிக்கு அடிக்கல் நாட்டியது குறித்து விளக்கம் அளித்த பிரதமர் நரேந்திர மோடி, விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். அப்போது, ஔவையாரின் பாடலை நினைவு கூர்ந்தார்.

'வரப்புயர, நீர் உயரும்
நீர் உயர, நெல் உயரும்
நெல் உயர, குடி உயரும்
குடி உயர, கோல் உயரும்
கோல் உயர, கோன் உயர்வான்'

என்ற ஔவையின் பாடலை தமிழில் கூறினார். அப்போது, பார்வையாளர்கள் கைதட்டி வரவேற்பு அளித்தனர்.

இதேபோன்று, சுயசார்பு இந்தியா திட்டம் தொடர்பாக பேசிக் கொண்டிருந்த அவர், பாரதியாரின் 'பாரத தேசம்...' பாடலை நினைவூட்டினார். 'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்' என்ற பாடலில், சரணங்களாக வரக் கூடிய

'ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல்செய்யோம் தலைசாயுதல் செய்யோம்' என்ற வரிகளை தமிழில் பாடினார்.

முன்னதாக, தனது பேச்சைத் தொடங்கும் போது 'வணக்கம்' 'சென்னை, வணக்கம்' தமிழ்நாடு என தமிழில் பேசினார்.

## ரூ. 8,000 கோடிக்கு புதிய திட்டங்களை தொடக்கி வைத்தார்




சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பல்வேறு புதிய திட்டங்களுக்கான தொடக்க விழாவில், முதல்வர் பழனிசாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் கரங்களைப் பற்றி உயர்த்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்திய பிரதமர் நரேந்திர மோடி. உடன் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், பேரவைத் தலைவர் பி.தனபால், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத்.

**சென்னை, பிப். 14:** உணவு தானிய உற்பத்தியில் மிகச் சிறந்த சாதனை படைத்து வருவதாக தமிழக விவசாயிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டுத் தெரிவித்தார்

தமிழகத்தில் ரூ.8,000 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களைத் தொடக்கி வைக்கவும், அடிக்கல் நாட்டவும் பிரதமர் ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்தார். தமிழக அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி பேசியது:

தமிழகத்தில் புகழ்பெற்ற கல்லணைக் கால்வாயைப் புதுப்பிக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் பலன்கள் மிகப்பெரியது. தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2.27 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். தமிழக விவசாயிகள் நீரைச் சிறப்பாகப் பயன்படுத்தி உணவு தானிய உற்பத்தியில் மிகச்சிறந்த சாதனையைப் படைத்து வருவதற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பழம்பெருமைக்கு மிகச் சிறந்த வாழும் உதாரணமாக இருப்பது கல்லணைதான். மேலும், சுயசார்பு இந்தியாவுக்கு மிகப்பெரிய உந்து சக்தியாகவும் அது திகழ்கிறது.

**புல்வாமா தாக்குதல்:** இந்தியர் யாரும் பிப்ரவரி 14-ஆம் தேதியை மறந்திருக்க மாட்டார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே தினத்தில், புல்வாமா தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதலை தீரத்துடன் எதிர்கொண்ட நமது பாதுகாப்புப் படையினரை நினைத்து பெருமிதம் கொள்கிறோம். அவர்களது துணிச்சல் நமது தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

**கடலோரப் பகுதிகள் மேம்பாடு:** மத்திய நிதிநிலை அறிக்கையில் இந்திய கடலோரப் பகுதிகளின் மேம்பாட்டுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது மீனவ சமுதாய மேம்பாட்டுக்கு உதவும் வகையில் நிதிநிலை அறிக்கையில் பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியாவில் நவீனமாக்கப்படும் மீன்பிடி துறைமுகங்களில் சென்னையும் ஒன்றாக உள்ளது. கடல் பாசி வளர்ப்புக்காக தனி பூங்கா தமிழகத்தில் ஏற்படுத்தப்பட உள்ளது.

**இலங்கைத் தமிழர் விவகாரம்:** யாழ்ப்பாணம் சென்ற ஒரே பிரதமர் நான்தான். அங்குள்ள தமிழ் சமுதாயத்தினருக்கு செய்யப்பட்ட நலத் திட்ட உதவிகளைப் போன்று, கடந்த காலங்களில் எந்த அரசும் செய்யவில்லை. யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கப்பட உள்ள கலாசார மையத்துக்கான கட்டுமானப் பணிகளை இந்தியா முன்னின்று செய்து கொடுத்தது. இலங்கைத் தமிழர்களுக்கு சம வாய்ப்புகள், சம நீதி, அமைதி, கண்ணியம் கிடைக்க வேண்டுமென்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது.

**மீனவர்கள் பிரச்னை:** கடற்பகுதியில் நமது மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னை நீண்டகாலமாக உள்ளது. எனது தலைமையிலான மத்திய அரசு மீனவர்களின் நலன்களைக் காப்பதில் எப்போதும் துணை நிற்கும். தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டாலும் விடுவிக்கப்படுகிறார்கள்.

1,600-க்கும் அதிகமான மீனவர்கள் இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இப்போது இலங்கையின் வசம் எந்தவொரு இந்திய மீனவரும் இல்லை. அவர்களுக்குச் சொந்தமான 313 படகுகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள படகுகளையும் விடுவிக்கும் பணி நடந்து வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வரவேற்றார். முதல்வர் பழனிசாமி தலைமை தாங்கினார். ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத், அமைச்சர்கள், எம்.பி.,க்கள், எம்.எல்.ஏ.,க்கள், தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கூட்டணிக் கட்சிகள்:** தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளில் பாமக சார்பில் அதன் தலைவர் ஜி.கே.மணி, முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், தேமுதிக துணைச் செயலாளர் பார்த்தசாரதி, முன்னாள் எம்.எல்.ஏ. அழகாபுரம் ஆர்.மோகன்ராஜ், பாஜக மூத்த தலைவர்கள் எச்.ராஜா, இல.கணேசன், பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## என்னென்ன திட்டங்கள்?

தமிழகத்தில் ரூ.4,486 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை தொடக்கி வைத்தார். மேலும், ரூ.3,640 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இதற்கான நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

- சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கத் திட்டமானது வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை ரூ.3,770 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 9.05 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த மெட்ரோ ரயில் பாதையானது, வடசென்னை பகுதியை இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சென்னை கடற்கரை மற்றும் அத்திப்பட்டு இடையிலான நான்காவது ரயில் பாதையானது ரூ.293.40 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு இடையிலான பயணம் எளிமையாகும். சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களை இணைக்கும் வகையிலான இந்தத் திட்டத்தால் ரயில் பயணம் சுலபமாக நடைபெறும்.
- விழுப்புரம்–கடலூர்–மயிலாடுதுறை–தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை–திருவாரூர் இடையிலான ஒற்றை வழி ரயில் பாதையானது ரூ.423 கோடியில் மின்வழித் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூ.14.61 லட்சம் அளவுக்கு தினமும் எரிபொருள் சேமிக்கப்படும். இந்த மூன்று திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.4,486.40 கோடியாகும். இந்தப் புதிய திட்டங்கள் அனைத்தையும் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

**அர்ஜுன் போர் பீரங்கி:** முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட அர்ஜுன் போர் பீரங்கியை நாட்டுக்கு அர்ப்பணித்தார். இந்த தளவாடமானது, 15 கல்வி நிறுவனங்கள், 8 ஆய்வகங்கள் மற்றும் பல்வேறு சிறு–குறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அடிக்கல் நாட்டு விழா:** தமிழகத்தில் ரூ.3,640 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். கல்லணைக் கால்வாய் சீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டமானது ரூ.2,640 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம், காவிரி டெல்டா பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்வது எளிதாக்கப்படும்.

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (ஐஐடி) சார்பில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஆராய்ச்சி வளாகம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக சென்னையை அடுத்த தையூரில் 2 லட்சம் சதுர மீட்டரில், மிகப்பெரிய வளாகம் கட்டப்படுகிறது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.